**2018ஆம் வருடம் ஆகஸ்டு மாதம் 27.08.2018ம் நாள் திங்கள் கிழமை தருமபுரி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்**

**முன்னிலை : திரு. வே. கிருஷ்ணகுமார், டி.சி.இ.,**
**நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர் (பொ)**

**பொருள் எண் : 1**

இந்நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர் (பொ) அவர்களின் ஜுலை 2018ம் மாத நாட் குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

பதிவு செய்யலாம்

**பொருள் எண் : 2**

தருமபுரி நகராட்சிக்கு புதிய பேருந்து நிலையம் அமைக்க அரசாணை MS No.75 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 24.07.2018ல் ரூ.39.14 கோடி மதிப்பீட்டில் தனியார் பங்களிப்புடன் (Under PPP Mode DBFOT Based) புதிய பேருந்து நிலையத்தினை அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.3530/2018/டிபி3 நாள் 23.08.2018ல் தெரிவித்துள்ளவாறு PDGF நிதியின் கீழ் TNUIFSL மூலம் இத்திட்டத்திற்கான கலந்தாலோசகர் (Common Transaction Advisor) நியமித்தும் பணிகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே, கலந்தாலோசகர் (Common Transaction Advisor) நியமித்தும் பணிகள் மேற்கொள்ள மன்ற அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 3**

இந்கராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட விவரப்படியான கடைகள் 26.07.2018 அன்று நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் மாத வாடகை அடிப்படையில் கடைகள் பொது ஏலம் விடப்பட்டது. இதில் கீழ்கண்ட விவரப்படியான ஏலதாரர்கள் உயர்ந்த பட்ச மாத வாடகைக்கு ஏலத்தொகை கோரியுள்ளார்கள்.

| வ. எண் | கடைகளின் விவரம் | கடை எண் | உயர்ந்தபட்ச ஏலதாரர் பெயர் | உயர்ந்த பட்சஏலத் தொகை (ஒருமாத வாடகை) | உயர்ந்த பட்ச ஒப்பந்தப் புள்ளிதாரர் பெயர் | உயர்ந்தபட்ச ஒப்பந்தப் புள்ளிதொகை (ஒரு மாத வாடகை) |
|---|---|---|---|---|---|---|
| 1. | சந்தைப்பேட்டை ரோடு (ஆதரவற்றோர் விடுதி முன்புறம்) | 13 | எம்.நாகராஜன் | 5550 | ஒப்பந்தப் புள்ளி அளிக்க வில்லை | |
| 2. | சந்தைப்பேட்டை ரோடு (ஆதரவற்றோர் விடுதி முன்புறம்) | 15 | பி.ராணி | 7200 | ஒப்பந்தப் புள்ளி அளிக்க வில்லை | |
| 3. | சந்தைப்பேட்டை ரோடு (வாரச்சந்தை முன்புறம்) | 17 | எம்.சென்னகேசவன் | 6200 | ஒப்பந்தப் புள்ளி அளிக்க வில்லை | |
| 4. | சந்தைப்பேட்டை ரோடு (வாரச்சந்தை முன்புறம்) | 18 | எம்.சென்னகேசவன் | 7600 | ஒப்பந்தப் புள்ளி அளிக்க வில்லை | |
| 5. | சந்தைப்பேட்டை ரோடு (வாரச்சந்தை முன்புறம்) | 19 | எம்.சென்னகேசவன் | 6600 | ஒப்பந்தப் புள்ளி அளிக்க வில்லை | |
| 6. | சந்தைப்பேட்டை ரோடு (வாரச்சந்தை முன்புறம்) | 20 | எம்.சென்னகேசவன் | 7300 | ஒப்பந்தப் புள்ளி அளிக்க வில்லை | |

**அலுவலகக்குறிப்பு**

வரிசை எண் 1 முதல் 6 வரை கடைகளுக்கு அரசு ஆணை 92 நாள் 3.7.2007ன்படி ஒன்பது ஆண்டுகளுக்கு குத்தகை உரிமம் அனுமதிக்கவும், மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை கடை வாடகை 15 சதவீதம் உயர்வு செய்யவும், உயர்ந்தபட்ச ஏலத்தொகை கோரியுள்ள 6 கடைகளை குத்தகைதாரருக்கு ஏல நிபந்தனைகளுக்குட்பட்டு ஒப்படைக்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 4**

இந்கராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட விவரப்படியான கடைகள் 21.08.2018 அன்று நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் மாத வாடகை அடிப்படையில் கடைகள் பொது ஏலம் விடப்பட்டது. இதில் கீழ்கண்ட விவரப்படியான ஏலதாரர்கள் உயர்ந்த பட்ச மாத வாடகைக்கு ஏலத்தொகை கோரியுள்ளார்கள்.

| வ. எண் | கடைகளின் விவரம் | கடை எண் | உயர்ந்தபட்ச ஏலதாரர் பெயர் | உயர்ந்த பட்சஏலத் தொகை (ஒரு மாத வாடகை) | உயர்ந்தபட்ச ஒப்பந்தப் புள்ளிதாரர் பெயர் | உயர்ந்தபட்ச ஒப்பந்தப் புள்ளிதொகை (ஒரு மாத வாடகை) |
|---|---|---|---|---|---|---|
| 1. | பென்னாகரம் ரோடு (துப்புரவு பணியாளர் குடியிருப்பு முன்புறம்) | 1 | டி.கௌதமன் | 6872 | ஒப்பந்தப் புள்ளி அளிக்க வில்லை | |
| 2. | பென்னாகரம் ரோடு (துப்புரவு பணியாளர் குடியிருப்பு முன்புறம்) | 6 | என்.எம்.சக்திவேல் | 6882 | ஒப்பந்தப் புள்ளி அளிக்க வில்லை | |

**அலுவலகக்குறிப்பு**

வரிசை எண் 1, 2 வரை கடைகளுக்கு அரசு ஆணை 92 நாள் 03.07.2007ன் படி ஒன்பது ஆண்டுகளுக்கு குத்தகை உரிமம் அனுமதிக்கவும், மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை கடை வாடகை 15 சதவீதம் உயர்வு செய்யவும், உயர்ந்தபட்ச ஏலத்தொகை கோரியுள்ள இரண்டு கடைகளை குத்தகைதாரருக்கு ஏல நிபந்தனைகளுக்குட்பட்டு ஒப்படைக்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 5**

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920ன் படி அதில் உள்ள சட்ட விதிகளின் படி நகராட்சிகளின் சொத்துவரி சீராய்வு 01.04.2018 முதல் செய்து நடைமுறைபடுத்த வேண்டும் என்று அரசு உத்திரவிடப்பட்டுள்ளது. மேற்படி அரசு உத்திரவிற்கான அரசாணை (பல்வகை) எண்.76 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள் 26.07.2018 நகர் மன்றத்தின் தகவலுக்கும் அரசாணை மற்றும் அதில் குறிப்பிட்டுள்ளவாறு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் வழிக்காட்டுதலின் படி சொத்துவரி சீராய்வு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

பதிவு செய்யப்படுகிறது.

**பொருள் எண் : 6**

அரசு ஆணை எண் 73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 19.07.2018ல் 01.04.2018 முதல் சொத்துவரி சீராய்வு மேற்கொள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்கு 50 சதவீதத்திற்கு மிகாமலும் வாடகை குடியிருப்பு கட்டிடங்களுக்கு 100 சதவீதத்திற்கு மிகாமலும் சொத்துவரி உயர்வு செய்திட அனுமதிக்கப்பட்டது.

இந்நிலையில் அரசு ஆணை எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 26.07.2018ல் ஏற்கனவே வழங்கப்பட்ட அரசாணையில் உத்திரவிடப்பட்ட வாடகை குடியிருப்பு கட்டிடங்களுக்கு மட்டும் 100 சதவீதத்திற்கு மிகாமல் என்பதை தற்போது 50 சதவீதத்திற்கு மிகாமல் சொத்துவரி உயர்வு செய்திட திருத்திய உத்திரவு வழங்கி அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்படி அரசாணையின் விவரங்கள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. பதிவு செய்யலாம்.
2. அரசாணையின் படி 01.04.2018 முதல் சொத்துவரி சீராய்வு செய்திட அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 7**

அரசு ஆணை ண. 73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 19.07.2018 மற்றும் அரசு ஆணை எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 26.07.2018ல் 01.04.2018ம் தேதி முதல் சொத்து சீராய்வு (Revision 2018) மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும் சொத்துவரி சீராய்வு தொடர்பான ஆய்வு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது அறிவுரைகளின் படி சொத்துவரி சீராய்வு தொடர்பான நாளிதழ் விளம்பர அறிவிப்பு மாஸ்டர் பதிவேடு (Master Ledger) தயார் செய்தல் உரிய சொத்துவரி சுய மதிப்பீட்டு படிவங்கள் அச்சடித்தல் நகர் எடுத்தல் மற்றும் சிறப்பு அறிவிக்கை (Special Notice) சொத்து வரி விதிப்புதாரர்களுக்கு கூரியர் மூலம் சார்வு செய்திடவும் மற்றும் இதர உத்தேச செலவினம் ரூ.10.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 8**

இந்நகராட்சியில் பொறியாளர் பிரிவில் இயங்கும் ஈப்பு வாகனம் TN29BC9072, 60000ம் கி.மீ. ஓடிவிட்டதால் ஆயில் சர்வீஸ் செய்து தருமாறு ஈப்பு வாகன ஓட்டுநர் அவர்கள் கோரியுள்ளார். மேற்கண்ட ஈப்பு வாகனம் TN29BC9072 பழுதுகளை சரி செய்ய அரசு அனுமதி பெற்ற பணிமனையான SKS ஆட்டோ மொபைல்ஸ் நிறுவனத்தில் செய்ய ஏற்படும் தோராய செலவின தொகை ரூ.10,000ம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 9**

தருமபுரி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்படும் வாகனம் TN29BF1096 மினி ஆட்டோக்கு டயர் & டியூப் புதியதாக பொறுத்தும் பணிக்கு அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனைகளில் விலைப்புள்ளி கோரியதில் 23.07.2018ம் தேதியில் பெறப்பட்ட விலைப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விலைப்புள்ளிதாரர் பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | ஜோசப் ஆட்டோ கேரேஜ் | Rs.8,200/- |
| 2. | அஜ்மிர் ஆட்டோ கேரேஜ் | Rs.8,400/- |
| 3. | ஸ்ரீ வாரி மோட்டார் ஒர்க்ஸ் | Rs.7,900/- |

**அலுவலகக்குறிப்பு**

1. வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வ.எண்.3ல் கண்டுள்ள ஸ்ரீ வாரி மோட்டார் ஒர்க்ஸ், தருமபுரி என்பவர் குறைவாக கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மன்ற அனுமதியை எதிர்நோக்கி பணிகள் மேற்கொண்டதையும் பட்டியல்படி தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 10**

தருமபுரி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்படும் வாகனம் TN29BF1076 மினி ஆட்டோக்கு டயர் & டியூப் புதியதாக பொறுத்தும் பணிக்கு அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனைகளில் விலைப்புள்ளி கோரியதில் 23.07.2018ம் தேதியில் பெறப்பட்ட விலைப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விலைப்புள்ளிதாரர் பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | ஜோசப் ஆட்டோ கேரேஜ் | Rs.8,800/- |
| 2. | அஜ்மிர் ஆட்டோ கேரேஜ் | Rs.8,400/- |
| 3. | ஸ்ரீ வாரி மோட்டார் ஒர்க்ஸ் | Rs.7,900/- |

**அலுவலகக்குறிப்பு**

1. வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வ.எண்.3ல் கண்டுள்ள ஸ்ரீ வாரி மோட்டார் ஒர்க்ஸ், தருமபுரி என்பவர் குறைவாக கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மன்ற அனுமதியை எதிர்நோக்கி பணிகள் மேற்கொண்டதையும் பட்டியல்படி தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 11**

தருமபுரி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்படும் வாகனம் TN29AM7501 லாரிக்கு தகுதி சான்று புதுப்பிக்க வேண்டியுள்ளதால் வாகனத்தின் பழுதினை சரி செய்யும் பணிக்கு அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனைகளில் விலைப்புள்ளி கோரியதில் 16.07.2018ம் தேதியில் பெறப்பட்ட விலைப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விலைப்புள்ளிதாரர் பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | ஜோசப் ஆட்டோ கேரேஜ் | Rs.53,350/- |
| 2. | அஜ்மிர் ஆட்டோ கேரேஜ் | Rs.51,600/- |
| 3. | ஸ்ரீ வாரி மோட்டார் ஒர்க்ஸ் | Rs.47,550/- |

**அலுவலகக்குறிப்பு**

1. வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வ.எண்.3ல் கண்டுள்ள ஸ்ரீ வாரி மோட்டார் ஒர்க்ஸ், தருமபுரி என்பவர் குறைவாக கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மன்ற அனுமதியை எதிர்நோக்கி பணிகள் மேற்கொண்டதையும் பட்டியல்படி தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தனி அலுவலர்**
**மற்றும் ஆணையாளர் (பொ)**
தருமபுரி நகராட்சி.

**2018ஆம் வருடம் ஆகஸ்ட் மாதம் 27ம் நாள் திங்கட்கிழமை தருமபுரி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்ட தீர்மான நகல்**

| **பொருள் எண்கள்** | **தீர்மான எண்கள்** | **நிறைவேற்றப்பட்ட தீர்மான விவரம்** |
|---|---|---|
| பொருள் : 1 | 496 | பதிவு செய்யப்பட்டது |
| பொருள் : 2 முதல் 11 வரை | 497 முதல் 506 வரை | அனுமதிக்கப்பட்டது |

தனிஅலுவலர்(ம) ஆணையாளர்(பொ)
தருமபுரி நகராட்சி.